# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

## S.C.151/2021

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ம் -ம் நாள் வியாழக்கிழமை PW-2 இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

Deposition of LW Examined as PW2
எதிரிகள் ஆஜர்

| | | |
|---|---|---|
| Date | : | 31.08.2023 |
| Name | : | Vimala |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Religion | : | |
| Age | : | |

<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>

முதல் விசாரணை

நான் தற்போது மயிலாடுதுறை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிப்புரிந்து வருகிறேன். கடந்த 21.09.2020- ம் தேதி சீர்காழி மதுவிலக்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிப்புரிந்தபோது அன்றைய தினம் மதுவிலக்கு அமல்பிரிவு காவல் ஆய்வளார் தலைமையில் , மண்டல மதுவிலக்கு குற்ற தணிக்கை பொதுப்பிரிவு உதவி ஆய்வாளர் பாலச்சந்திரன், வைத்தீஸ்வரன் கோயில் காவல் உதவி ஆய்வாளர் சந்திரசேகரன் ஆகியோருடன் மதுவிலக்கு சம்பந்தமாக சோதனை செய்வதற்காக சீர்காழி சட்டநாதப்புரம் ரவுண்டான அருகே வாகன தனிக்கை செய்துக்கொண்டிருந்தபோது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த அன்றைய தினம் காலை 11 மணியிலிருந்து 12 மணிக்கு TN 04 V 0450 பதிவு கொண்ட ஒயிட் கலர் மாருதி ஆம்னி வேனை நிறுத்தி சோதனை செய்தபோது அதில் இருந்த எதிரிகள் ஓட முற்பட்டவர்களை பிடித்து வாகனத்தை சோதனை செய்தபோது 60 லிட்டர் பிடிக்கக்கூடிய 8 பாலித்தீன்

பைகளில் தலா 50 லிட்டர் வீதம் 400 லிட்டர் விஷ நெடியுடன் கூடிய பாண்டி சாராயம் இருந்தது. மேற்படி நபரை விசாரணை செய்தபோது தன் பெயர் மணி என்கிற மணிவண்ணன் என்றும், அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து, அண்ணப்பன் பேட்டை குமார் என்பவர் காரைக்கால் அருகில் உள்ள வரிச்சிக்குடிக்கு வரசொன்னதாகவும், அங்கே ஆம்னி எடுத்துக்கொண்டு முன்னே செல்லுங்கள், நான் இருச்சக்கர வாகனத்தில் பின்னர் வருகிறேன் என்று சொன்னார். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்ய தனிநபர் சாட்சிகள் முன்வராததால் நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் சந்திரசேகரனும் கையெழுத்து செய்தோம். மேற்படி எதிரிகளிடமிருந்து தடயப்பொருள்களான நான்கு சக்கர வாகனத்தை கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழிப்பு மகசரில் நானும் , சந்திரசேகரன் என்பவரும் கையெழுத்து செய்தோம். அந்த கையெழுத்துகள் **அ.சா.ஆ , 6 முதல் அ.சா.ஆ 10** வரை குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் சம்பவ இடத்தை வரைப்படம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தார்கள். அதில் நானும், சந்திரசேகரன் என்பவரும் கையெழுத்து செய்தோம். நான் இரண்டாவது சாட்சியாக கையெழுத்து போட்டேன். பின்பு தடயம் மற்றும் நான்கு சக்கர வாகனம் எதிரி மற்றும் தலை மறைவு எதிரி மீது ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். அதற்கு நானும், உதவி ஆய்வளார் சந்திரசேகரன் என்பவரும் உதவியாக இருந்தோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு சம்யத்தில் நான் நீதிமன்ற காவலர் பணியில் இருந்தேன் என்றால் சரிதான். அதை தவிர்த்து ரோந்து பணி மற்றும் சிறை வாசிகளுக்கு வழிக்காவலராகவும் செல்வேன். அதிகப்படியாக நீதிமன்ற பணியில்தான் இருந்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் புகார்தாரர் என் உயர் அதிகாரி என்றால் சரிதான். சாட்சிகள் அனைவரும் எங்கள் காவல் நிலையத்தை சேர்ந்தவர்கள் என்றால் வெளிநபர்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. காவல் ரோந்திற்கு நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் சந்திரசேகரன், உதவி ஆய்வளார் பாலச்சந்திரன் ஆகியோர்கள் சென்றோம். தணிக்கை செய்வதற்கு அனுமதி கடிதம் எதுவும் வழங்கப்பட்டதா என்றால் ஆய்வாளருக்குதான் தெரியும். சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையம் 2 கி.மீட்டர் தொலைவு இருக்கும். சம்பவ இடம் நான்கு வழிசாலை , அதில் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகாமையிலேயே பேருந்து நிலையம், கடைகள் உள்ளன என்றால் ரோட்டில்

இருந்து தள்ளிதான் உள்ளது. சம்பவ இடத்தில் வேகத்தடைகள் இருப்பதால் எதிரிகளை நாங்கள் ஓடி பிடிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால் வேகத்தடையை தாண்டி ஓடினார். முதல் எதிரி 2-ம் எதிரியுடன் போனில் பேசியது தொடர்பாக ஆய்வாளர் முதல் எதிரியுடன் போனில் பேசினாரா என்றால் ஒப்புதல் வாக்குமூலத்தில்தான் அவ்வாறு கூறினார்கள். எங்கள் காவல் நிலையத்தை சேர்ந்த குற்ற எண் 567/2020 குற்ற வழக்கிலும் நான் தான் ஒப்புதல் வாக்குமூலம் சாட்சி என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட தடயப் பொருள்களை அரசு ஆதாயம் செய்ய நாகப்பட்டிணம் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைத்தோம். சம்பவ இடத்திற்கு தகவல் கிடைத்து நாங்கள் 11. to 12 மணிக்கு சென்றோம். இந்த விவரத்தை ஆய்வாளர் விசாரணையில சொல்லவில்லை என்றால் சரிதான். அருகில் உள்ள காவல் நிலையத்திற்கு மூன்று மணிநேரம் காலதாமதமாக அழைத்து சென்றோம் ன்றால் காவல் ஆய்வாளருக்கு தான் தெரியும். வழக்கு ஆவணங்கள் அனைத்து காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்படட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் தான் தயாரிக்கப்பட்டது. இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி என் உயர் அதிகாரி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் வழக்கின் பொருள்கள் எதிரிகளை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவம் உண்.மை என்றால் தனிநபர்களை சாட்சியமாக போட்டிருப்போம் என்றால் சாட்சியம் அளிக்க யாரும் முன்வரவில்லை.